தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 251/2019 | சாட்சியம் | **:** | **MW2** |
| **Name** | **:** | திரு.மோகன் | | | |
| **Date** | **:** | **25.03.2026** | | | |
| **Time** | **:** | **10.55 a.m to 11.11 a.m** | | | |

நி.த.சா.**2.**திரு.மோகன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனக்கு ஒரு மாதத்தில் இரண்டு சனிக்கிழமைகள் Weekly off என்றால் ஆமாம். டீம் லீடர்களுக்கு அது போன்று மாதத்திற்கு இரண்டு நாட்கள் Weekly off இல்லை என்றால் ஆமாம். ஆப்ரேட்டர்களுக்கும் அது போன்று Weekly off இல்லை என்றால் ஆமாம். என்னை போன்ற Indirect Employee-க்கு Leave Travel Allowances 6 நாட்கள் விடுப்பு எடுப்பதற்கு முன்பாக வழங்கப்படும் என்றால் சரிதான். ஆனால் Executive-க்கு மேல் நிலையில் உள்ளவர்களுக்கு தான் அந்த Allowances பொருந்தும். டீம் லீடர்ஸ் மற்றும் ஆபரேட்டர்களுக்கு இந்த Leave Travel Allowances மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. Leave Travel Allowances ஆனது Indirect Employee-க்கு வழங்கப்படுவது போன்று ஆறு நாட்கள் விடுப்பு எடுத்த பின்னர் டீம்

லீடர்களுக்கு வழங்கப்படுவது இல்லை என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்பட்டது எங்கள் நிறுவனத்தின் Leadership Standard Work நகல் என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.**47**. மேற்படி ஆவணத்தை கண்டுள்ள திரு.லட்சுமிநாராயணன் அவர்கள் எங்கள் நிறுவனத்தில் என்ன வேலை பார்க்கிறார் என்றால் அசிஸ்டன்ட் மேனேஜர் ஆவார். அந்த ஆவணத்தில் லீடர்ஷிப் நிலையில் உள்ளவர்களுக்கு என குறிப்பிட்டுள்ள வேலைகளை திரு.லட்சுமி நாராயணன் அவர்கள் தான் பார்த்து வந்தார் என்றால் அது வேலை இல்லை ஆக்டிவிட்டி ஆகும். என்னிடம் காட்டப்படுவது Line Production performance log book என்றால் ஆமாம். அது தொ.சா.ஆ.**48**. மனுதாரர் மற்றும் நிர்வாக தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் மனு தொழிலாளிகள் ஆப்ரேட்டர்கள் என்ற நிலையில் தான் வேலை பார்த்தார்கள் என்பதை காட்டுவதற்காக தான் உள்ளது என்றால் இல்லை. இந்த பரிந்துரையில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து தொழிலாளர்களும் தொழிலாளர்கள் என்ற வரையறைக்குள் வரக்கூடியவர்கள் என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.03.25 18:32:11 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:25.03.2026.